# தமிழ்நாடு வனத்துறை

## முதுமலை புலிகள் காப்பகம், உதகமண்டலம் கோட்டம்

**தொலைபேசி எண் -0423-2444098 , மின்னஞ்சல்:** ddmtrooty@gmail.com

**வலைதளம்** : www.forests.tn.gov.in, www.mudumalaitigerreserve.com

**காவடி பணியிடங்கள் நேரடி நியமனம் - 03 பணியிடங்கள்**

**அறிவிக்கை எண் - 02/ 2025 நாள் 22.12.2025**

தமிழ்நாடு வனத்துறை, முதுமலை புலிகள் காப்பகம், உதகமண்டலம் கோட்டம், தெப்பக்காடு யானை முகாமில் காலியாகவுள்ள 03 காவடி பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில், நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு அதனடிப்படையில் தகுதியுள்ள நபர்கள் தேர்வு செய்யப்படுவர்.

இதற்கான அறிவிப்பு, விண்ணப்ப படிவம் மற்றும் இதற்கான நிபந்தனைகளை www.forests.tn.gov.in, www.mudumalaitigerreserve.com, இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் விண்ணப்பங்கள் கீழ்கண்டுள்ள முகவரிக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05.01.2026 ந் தேதி மாலை 5.00 மணிக்குள். இத்தேதிக்கு பின்வரும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**துணை இயக்குநர் அலுவலகம்,**
**முதுமலை புலிகள் காப்பகம்,**
**மொளன் ஸ்டுவார்ட் ஹில்,**
**உதகமண்டலம்- 643 001.**

**துணை இயக்குநர்,**
**முதுமலை புலிகள் காப்பகம்,**
**உதகமண்டலம்.**

# தமிழ்நாடு வனத்துறை

## முதுமலை புலிகள் காப்பகம், உதகமண்டலம் கோட்டம்.

## விண்ணப்ப படிவம்

தெப்பக்காடு யானைகள் முகாமில் காலியாகவுள்ள யானை காவடி பணியிடத்திற்கான நேரடி நியமனத்திற்கான விண்ணப்ப படிவம்.

பதவியின் பெயர் : காவடி

| |
|---|
| கடவுச்சீட்டு அளவு புகைப்படம் |

1. விண்ணப்பதாரரின் பெயர்
2. முகவரி

   ........................................................................................................................

   ..........................................................................................................................

3. தொலைப்பேசி/ கைப்பேசி எண் ..........................................................
4. மின்னஞ்சல் ..................................................................................
5. பிறந்த தேதி .................................................................................
6. வயது (30.11.2025 ந் தேதி முடிய) ........................
7. பழங்குடியினர் மட்டும்( பழங்குடியினர் உட்பிரிவு சான்றிதழ் நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)
8. கல்வித்தகுதி விவரம் ........................................................................
9. பதவிக்கான தகுதிகள்
   - தமிழில் பேச தெரிந்தவர்களாக கண்டிப்பாக இருக்க வேண்டும்.
   - யானை பராமரிப்பு செய்ததற்கான பராம்பரிய அறிவு மற்றும் அனுபவங்கள் பெற்றிருக்க வேண்டும். மேலும் விண்ணப்பதாரர் யானையுடன் பணிபுரிந்த மற்றும் அனுபவமுள்ள குடும்பங்களிலிருந்து வந்தவர்களாக கண்டிப்பாக இருக்க வேண்டும். இதற்கான சான்றாக குடும்ப அட்டை அல்லது பெற்றோர்கள் பணிபுரிந்ததற்கான ஏதேனும் ஒரு ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
   - தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஏதேனும் ஒரு யானை முகாமில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் யானைகளுக்கு பயிற்சி மற்றும் யானைகளை கையாண்டதற்கான அனுபவம் கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும். அதற்கான அனுபவச்சான்று சமர்ப்பிக்க வேண்டும்.
   - அரசாணை எண்.127 சுற்றுசூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை(வனம்.2(i) துறை நாள் 10.07.2025ல் குறிப்பிட்டுள்ளவாறு Class VI-ல் வரும் காவடி பணியிடங்களுக்கு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் மேற்காண் தகுதிகளை பெற்றிருக்கும் பழங்குடியின பிரிவைச் சார்ந்த (Scheduled Tribes) விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
10. மேலே கூறப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவை எனச் சான்றளிக்கிறேன்.

**இடம் :** **நாள் :** **விண்ணப்பதாரர் கையொப்பம்**

## பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

- முழுமையற்ற மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- தேவையான அனைத்து ஆவணங்களிலும் சுயசான்றளிக்கப்பட்ட (Self Attested) நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பதாரர் வழங்கும் தகவல்கள் அனைத்தும் உண்மையாக இருக்க வேண்டும். மேலும் தவறான தகவல்கள் அல்லது போலி ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளது என தெரியவந்தால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- இத்தேர்வு நேரடி நியமனம் மூலமாக மட்டுமே நடைபெறும். நியாயமற்ற வழிகளில் வேலைகளை பெற்று தருவதாக கூறும் பொய்யான வாக்குறுதிகளை அளித்து, மோசடி செய்பவர்கள் மற்றும் முகவர்களிடம் விண்ணப்பதாரர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இது போன்ற தேவையற்ற நபர்களுடன் தொடர்பிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு ஏற்பட கூடிய எந்தவொரு இழப்பிற்கும் வனத்துறை பொறுப்பேற்காது.
- இப்பணியிடங்கள் அரசாணையின்படி பழங்குடியின பிரிவினருக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதர பிரிவினரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- காவடி நேரடி பணிநியமனங்கள் தொடர்பாக தேர்வு குழு எடுக்கும் முடிவே இறுதியானது.
- இப்பணி நியமனத் தேர்வு தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளை உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்படும் இறுதி ஆணைகளுக்குட்பட்ட நியமனம் ஆகும்.
- தற்காலிகமாக யானை காவடி பணியில் நீண்ட வருடங்கள் பணிபுரிந்த அனுபவமுள்ள நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- இதர தேவைப்படும் தகுதிகளின் அடிப்படையில், பணியில் முன்னுரிமை வழங்கப்படுவது குறித்து தேர்வுக்குழு இறுதி முடிவெடுக்கும்.
- நிலுவையிலுள்ள வழக்குகள்
  1. விண்ணப்பத்தில் நிலுவையிலுள்ள குற்ற வழக்குகள் அல்லது ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து அறிவித்திருப்பவர்கள்
     **முதல் தகவல் அறிக்கை ( FIR) அல்லது குற்றச்சாட்டு அறிக்கை மற்றும் காரணம் காண்பிக்க நோட்டீஸ் ஏதேனுமிருப்பின், அதன் நகல்களை தேவையான போது சமர்ப்பிக்க வேண்டும். அதன்படி தேர்வுக்குழு நடவடிக்கை மேற்கொள்ளும்.**
  2. தண்டனை / தண்டிப்புகள்
     **விண்ணப்பதாரர் மீது குறிப்பிட்ட குற்ற வழக்குகளில் தண்டனை அல்லது ஒழுங்கு நடவடிக்கை இருந்தால், நீதிமன்ற உத்திரவு, விடுவிப்பு உத்திரவு அல்லது நடவடிக்கை நினைவுக்குறிப்பு ஆகியவற்றின் ஆவணங்களின் அடிப்படையில் விண்ணப்பதாரர் தேர்வின் போது தேர்வுக்குழு நடவடிக்கை மேற்கொள்ளும்.**
  3. விண்ணப்பித்த பிறகு வழக்கு , நடவடிக்கை
     **விண்ணப்பம் சமர்ப்பித்த பிறகு, விண்ணப்பதாரர் மீது ஏதேனும் புதிய குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தால் தேர்வுக்குழுவிற்கு தெரியப்படுத்த வேண்டும். அதன்படி தேர்வுக்குழு நடவடிக்கை மேற்கொள்ளும்.**
- மேற்கூறிய தகவல்களை அறிவிக்க தவறினால், அது உண்மை மறைத்தல் எனக்கருதப்படும். மேலும் அதற்கான தண்டணை நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- விண்ணப்பங்கள் அஞ்சல் வழியாக அனுப்பினால் 05.01.2026 தேதி மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப்பெற வேண்டும். தாமதமாக கிடைக்கபெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**துணை இயக்குநர்,**
**முதுமலை புலிகள் காப்பகம்,**
**உதகமண்டலம்.**